Date: 28.07.22 C.C.No. 138/2018

அ.சா.1 மனோகரன் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை: (1 முதல் 5 மற்றும் 7 எதிரிகளுக்காக)

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எங்கள் ஊருக்கும் எதிரிகளின் ஊருக்கும் இடையில் 5 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள பாப்பு என்பவர் என் தங்கை. அ.சா.2 குமார் என்பவர் எனத சித்தப்பா மகன் ஆவார். அ.சா.3 மோகன் என் மைத்துனர் ஆவார். மற்ற சாட்சிகளான கருப்பசாமி, இளையாராஜா ஆகியோர்கள் என் நண்பர் என்றால் சரியல்ல. எதிர்தரப்பு ஆட்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் என் தங்கை சொல்லித்தான் தெரியும் என்றால் காலையில் நான் வேலைக்கு கிளம்பும்போது நடந்ததை சொன்னார்கள், நான் வேலைக்கு சென்றுவிட்டு வந்து பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். பின்னர் மாலை 7 மணியளவில் ஏற்கனவே நடந்த சச்சரவுகளை பற்றி கேட்டபோது கலமாகிவிட்டது. நான், என் தங்கை ஆகியோர் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை சார்ந்தவர்கள் என்றாலும், எதிரிகள் அணைவரும் வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்றாலும் சரிதான். எனது சகோதரி எதிரி ஜோதிமணியுடன் பொதுக்குழாயில் தண்ணீர் பிடிப்பது சம்மந்தமாக ஏற்பட்டதாக சொல்லப்படும் பிரச்சனையைத்தான் என்னிடம் கூறினார் என்றால் சரிதான். நாங்கள் எதிரிகளின் ஊருக்கு சென்று 6ம் எதிரி கதிரேசன் என்பவர் பள்ளிக்கூடம் முடித்து வீடு திரும்பும்பொழுது நானும் என் நண்பரும் சேர்ந்து 6ம் எதிரியை அடித்து வயலுக்குள் தூக்கிபோட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் பிரச்சனையை தட்டி கேட்டபோது எதிரிகள்தான் எங்களை தாக்கினார்கள். நான் மற்றும் 6 நபர்கள் சேர்ந்து 6ம் எதிரியை தாக்கியதாக கூறி எங்களுக்கு எதிராக ஒத்தக்கடை காவல் நிலையத்தில் பி.சி.ஆர். வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் நான் உட்பட 5 நபர்கள்மீது அவர்கள் வழக்கு தொடுத்துள்ளார்கள். எதிரிகள் எங்களை தாக்கியதாக நான் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் மேலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அப்போது போலீசார் விசாரணையில் எங்களை எதிரிகள் தாக்கியதாக கூறினேனா என்றால் கூறினேன். மேற்படி புகாரை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

நான் ஒரு மாடுபிடிவீரர் என்றால் சரிதான். எனது தங்கை நடந்த சம்பவத்தை என்னிடம் கூறியதை பின்னிட்டு நாங்கள்தான் எதிரிகளின்

ஊருக்கு சென்று அந்த சம்பவத்தை பற்றி கேட்கப்போனோம் என்றால் சரிதான். எதிரிகள்தரப்பில்தான் எங்களை பேச்சுவார்த்தைக்கு வரச்சொன்னார்கள், நாங்கள் சென்றோம். இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டள்ள கதிரேசன் ஏ்னபவருக்கு 15 வயதுதான் இருக்கும் என்றால் சரியல்ல, 17 வயது. எனது முந்தைய விசாரணையில் கடந்த 02.06.17ம் தேதி மாலை 7 மணியளவில் மேற்படி கதிரேசன்தான் என்னை கத்தியால் குத்தவிட்டான் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 02.06.17 அன்று மாலை 05.30 மணிக்கே எதிரிகள் எங்களை தாக்கிவிட்டதாக கூறி ஒத்தக்கடை காவல் நிலையத்தில் எதிரிகள் எங்கள்மீது புகார் கொடுத்ததாக சொல்லியள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவமானது அன்றையதினம் மாலை 7 மணியளவில் நடைபெற்றது. புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் எங்களை அன்றையதினம் விசாரித்தனர், பின்னிட்டு விசாரிக்கவில்லை. எங்களை போலீசார் மேலூரில் வைத:து விசாரித்தார்களா, எங்களது ஊரில் வைத்து விசாரித்தார்களா, அல்லது எதிரிகளின் ஊரில் வைத்து விசாரித்தார்களா என்றால் நாங்கள் மருத்துவமனையில் இருக்கும்பொது அங்கு வைத்து விசாரித்தனர்.

நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் மாடு பிடிக்கும்போது எனக்கு எற்பட்ட காயத்தை எதிரிகள் தாக்கியதில் ஏற்பட்ட காயமாககூறி பொய்யான புகார் கொடுக்கப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டள்ள கதிரேசன் என்பவரை தாக்கியதாக எதிரிகள்தரப்பில் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் எங்கள்மீது கொடுத்த புகாருக்காகத்தான் இந்த வழக்கில் நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகார் ஒன்றை கொடுத்து அவர்கள் சமரசத்திற்கு வந்துவிடுவார்கள் என்று என்னி இந்த வழக்கை நடத்திக்கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் என் தங்கை மற்றும் அவரது கணவரை காப்பாற்றுவதற்காக என்னை எதிரிகள் தாக்கியதாக கூறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Date: 28.07.22 C.C.No. 138/2018

அ.சா.2 குமார் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:
(1 முதல் 5 மற்றும் 7 எதிரிகளுக்காக)

நாங்களும், எதிரிகளும் வெவ்வேறு ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா.1 எனது பெரியப்பா மகன். அ.சா.1ன் தங்கை பாப்பு எனது அக்கா. அ.சா.3 மேகான் என் மச்சான் ஆவார். நாங்களும், எதிரிகளும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா.1யிடம் நடந்த விவரத்தை பாப்பு தொலைபேசிமூலம் கூறினார். நானும் அ.சா.1ம் வேலைக்கு சென்றுவிட்டு வந்து எதிரிகள் ஊருக்கு சென்று அந்த சம்பவத்தை பற்றி கேட்பதற்காக சென்றோம். சம்பவத்தை பற்றி போலீசார் என்னிடம் மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். மருத்துவமனையில் போலீசார் விசாரித்தபோது நான் புகார் கொடுத்தேன். நானும் புகார் வாக்கு மூலம் கொடுத்தேன் என்றால் எனது அண்ணன் அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுத்த பின்பு நானும் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். எனக்கு காயம் ஏற்பட்டிருந்தது. (சாட்சி வலதுகை புஜத்தில் உள்ள காயத்தழும்பை காட்டுகிறார்.) சம்பவத்தன்று இரவே போலீசார் என்னை விசாரித்தனர். நான் மிகச்சிறந்த மாடுபிடிவீரர் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் மாடுபிடிவீரர் என்றாலும் சரியல்ல. பொதுவாக எனது ஊரைச்சேர்ந்தவர்கள் மாடுபிடிவீரர்களாக பல்வேறு பகுதிகளில் பரிசு பெற்றுள்ளனர் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ள கதிரேசன் என்பவரை தாக்கியதாக கூறி நான் மற்றும் அ.சா.1 உட்பட பலநபர்கள்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அது பொய்யான வழக்கு.

நான் சொன்னமாதிரி நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் மாடு பிடிக்கும்போது எனக்கு எற்பட்ட காயத்தை நானாக கீரிக்கொண்டு எதிரிகள் தாக்கியதில் ஏற்பட்ட காயமாககூறி பொய்யான புகார் கொடுக்கப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றால் சரியல்ல. முனிச்சாமி, கலைவாணன் ஆகியோர்கள் என்னை பிடித்துக்கொண்டு கலைவாணன் கத்தியால் எனது கையில் வெட்டிவிட்டார். எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதாக சொல்வதால் போலீசார் விசாரணையின்போது அவ்வாறு இரத்தகதகாயம்பட்ட மேல்சட்டையை போலீசார் என்னிடமிருந்து வாங்கினார்களா என்றால் இல்லை. காயத்தை மட்டும் அவர்களிடம் காண்பித்தேன். எனது ஊருக்கும் மேலூர் அரசு மருத்துவமனைக்கும் சுமார்

7 கி.மீ. தூரம் உள்ளது. சம்பவத்திற்கு பின்னிட்டு உடனே மருத்துவமனை வந்துவிட்டேன் என்றால் காயம்பட்டவுடனே நான் மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். அப்பொழுது நான் மதுபோதையில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டள்ள கதிரேசன் மற்றும் இந்த வழக்கின் எதிரிகளை தாக்கியதாக எதிரிகள்தரப்பில் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் எங்கள்மீது கொடுத்த புகாருக்காகத்தான் இந்த வழக்கில் எங்கள்தரப்பில் எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகார் ஒன்றை கொடுத்து அவர்கள் சமரசத்திற்கு வந்துவிடுவார்கள் என்று என்னி இந்த வழக்கை நடத்திக்கொண்டு வருகிறோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. அ.சா.1ன் தங்கை மற்றும் அவரது கணவரை காப்பாற்றுவதற்காக என்னை எதிரிகள் தாக்கியதாக கூறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Date: 28.07.22 C.C.No. 138/2018

அ.சா.3 மோகன் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:
(1 முதல் 5 மற்றும் 7 எதிரிகளுக்காக)

அ.சா.1 மற்றும் அ.சா.2 என் மைத்துனர்கள் என்றால் சரிதான். பாப்பு எனது மனைவி. சம்பவம்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. காலையில் தெருபைப்பில் நடந்த சண்டை எனக்கு நேரடியாக தெரியாது. மாலையில் நடைபெற்ற சண்டையை நான் நேரடியாக பார்த்தேன். அ.சா.1 மற்றும் 2 ஆகியோர்களும் எதிரிகளும் வெவ்வேறு ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் நானோ எனது மனைவியோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 02.06.17 அன்று காலையில் நடைபெற்றதாக சொல்லப்படும் சம்பவத்திற்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஊர்க்காரர்கள் பேசி முடித்துக்கொள்வோம் என்பதால் புகார் கொடுக்கவில்லை. நான் ஊரில் இல்லை, சமயபுரம் சென்றுவிட்டேன். நான் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை சேர்ந்தவர் என்றாலும், எதிரிகள் மற்ற சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் சரிதான். எதிரிகள் நான் உட்பட அ.சா.1 மற்றும் 2 ஆகியோர்கள்மீது புகார் கொடுத்து பி.சி.ஆர். வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அது பொய்யான வழக்கு. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், என் மைத்துனருக்கா பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது உண்மை, சம்பவத்தின்போது நான்தான் சண்டையை விலக்கிவிட்டேன். அ.சா.1 மற்றும் அ.சா.2-க்கு காயம்பட்டது உண்மை. சம்பவம் நடந்த அன்றே போலீசார் என்னை விசாரித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, சம்பவத்திற்கு மறுநாள் என்னை விசாரித்தனர். என்னை போலீசார் எனது வீட்டில் வைத்து பலமுறை விசாரித்துள்ளார்கள். எத்தனைமுறை போலீசார் என்னை விசாரித்தனர் என்றால் ஒரு 5முறை எங்கள் வீட்டில் வந்து என்னை விசாரித்தனர். அதன்பின்னிட்டு பலமுறை ஒத்தக்கடை காவல் நிலையம் வரவழைத்து விசாரித்தனர்.